**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.82/2022 |
| Deposition of Witness for | : PW – 1 |
| Name and Age | : யுவராஜ் (வயது 65) |
| Father / Husband Name | : தேக்கிலேகவுண்டர் |
| Occupation | : கடை வைத்துள்ளேன் |
| Village | : மதகேரி |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 12.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s.355 of BNSS filed and allowed.**

**PW– 1**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மதகேரியில் குடியிருந்துக்கொண்டு பூசா கடை வைத்து நடத்தி வருகிறேன். 09.10.2017ம் தேதி மாலை சுமார் 05.00மணிக்கு ஜிட்டாண்ட அள்ளி பஸ்நிறுத்தம் அருகே ஈச்சர் வாகனம் ராயக்கோட்டைக்கு பக்கம் இருந்து பாலக்கோடு நோக்கி வந்தது. சூப்பர் XL இருசக்கர வாகனத்தில் மலையன்(எ)ரங்கநாதன் வண்டியை ஓட்டிக்கொள்ள, மாட்டுக்காரன்(எ)முனியப்பன் அவரை உட்காரவைத்துக்கொண்டு ஜிட்டாண்டஅள்ளி பஸ்நிறுத்தம் அருகே உள்ள டீக்கடையில் இருந்து ரோட்டின் இடதுபுறமாக வந்து பாலக்கோடுபக்கமாக உள்ள தக்காளி மண்டிக்கு சென்றுக்கொண்டிருந்தார்கள். பாலக்கோடு நோக்கி வந்த ஈச்சர் வாகனம் சூப்பர் XL வாகனத்தின் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தியது. இருவருக்கும் தலை மற்றும் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது. இருவரையும் போக்கு வண்டியில் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு அழைத்து வந்தோம். மருத்துவமனையில் மருத்துவர் மலையன்(எ)ரங்கநாதனை பரிசோதித்து அவர் இறந்துவிட்டதாக சொன்னார்கள். மாட்டுக்காரன்(எ)முனியப்பனை மேல் சிகிச்சைக்காக ஓசூர் அழைத்துச்சென்றபோது மதகிரி தப்பை என்ற இடத்தில் அவர் இறந்துவிட்டார். பின் அவரை பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு கொண்டுவந்தோம். இருவரையும் பிரேத பரிசோதனை செய்து கொடுத்தார்கள். சம்பவம் குறித்து காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த கையொப்பம் என்னுடையது தான். **புகார் அ.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி புகாரை எனது உறவினர் எழுதி கொடுத்தார். சம்பவத்தின் போது நான் டீக்கடையில் தான் இருந்தேன். அதன் பக்கத்தில் எனது பூசாகடை உள்ளது. இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்கள் ரோட்டை கடந்து இடதுபுறம் செல்லும்போது தான் விபத்து ஏற்பட்டது. இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் எழுத தெரியும். புகாரை நான் எழுதவில்லை. உடன் வந்தவர்களில்

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.12 17:40:14 +0530

ஒருவர் எழுதினார் அவர் விபரம் நினைவில்லை. நான் மூர்த்தி டீக்கடையில் இருந்தேன். கடையில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமாராக பத்து நபர்கள் இருந்திருப்பார்கள். நான் இருந்த டீக்கடைக்கும் சம்பவ இடத்திற்கும் 50–60அடி தூரம் இருக்கும். விபத்து சாலை தெற்கு வடக்கில் செல்கிறது. விபத்து சாலையில் மேற்கு நோக்கி ஜிட்டாண்டஅள்ளி செல்லும் பிரிவு சாலை உள்ளது. நான் நின்றிருந்த டீக்கடை ஜிட்டாண்டஅள்ளி பஸ் ஸ்டாப்பில் உள்ளது. ஜிட்டாண்டஅள்ளி ரோட்டில் இருந்து வடக்கு சாலையில் உள்ளது. விபத்து ஜிட்டாண்டஅள்ளி பிரிவு ரோட்டில் இருந்து தெற்கு நோக்கி உள்ள சாலையில் நடைபெற்றது என்றால் சரிதான். டீக்கடையில் சிவன் என்பவர் என்னுடன் இல்லை. தார்ரோட்டில் இருந்து டீக்கடை 25 அடி தூரம் இருக்கும் என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் விபத்தை பார்த்தேன் என்றால் சரியல்ல விபத்தை நேரடியாக பார்த்தேன். டீக்கடையில் இருந்து விபத்தான சம்பவ இடத்தை பார்க்கமுடியாது என்றால் சரியல்ல. வாகனங்கள் மோதிக்கொள்வதை பார்த்தேன். டீக்கடையில் இருந்து தெற்கு நோக்கி நான்கு சக்கர வாகனம் சென்றால் வாகனத்தின் பின்பக்கம் தான் பார்க்க முடியும் என்றாலும் வாகனத்தின் முன் பக்கம் பார்க்க இயலாது என்றால் சரிதான். விபத்தில் இறந்தவர் தூரத்து சொந்தம் ஆவார் மாமா உறவு முறை ஆவார். எனது தக்காளி மண்டி சம்பவ இடத்தில் இருந்து 25 அடி தூரத்தில் இடதுபக்கம் திரும்பும் சாலையில் சென்றால் உள்ளது. நான் சொல்வது போல் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் எனது மாமா என்பதால் எதிரி தான் விபத்தை ஏற்படுத்தினார் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தவுடன் மருத்துவமனை சென்றுவிட்டு காவல்நிலையம் சென்றேன். வழக்கு புகாரை 10.10.2017ம் தேதி புகார் கொடுத்தேன். எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றாலும், இறந்த என் மாமாவிற்கு இழப்பீடு பெறவே பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.12 17:40:21 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.82/2022 |
| Deposition of Witness for | : | PW – 2 |
| Name and Age | : | சிவன் (வயது 46) |
| Father / Husband Name | : | மாது |
| Occupation | : | விவசாயம் |
| Village | : | நாயக்கனூர் |
| Taluk | : | பாலக்கோடு |

**நாள்** – 12.06.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s.355 of BNSS filed and allowed.**

**PW– 2**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் நாயக்கனூரில் குடியிருந்துக் கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். 09.10.2017ம் தேதி மாலை சுமார் 05.00மணிக்கு ஜிட்டாண்டஅள்ளி பேருந்து நிறுத்தம் அருகே Super XL இருசக்கர வாகனத்தில் என் மாமா ரங்கநாதன்(எ)மலையன் வண்டியை ஓட்டிக்கொள்ள முனியப்பன்(எ)மாட்டுக்காரன் பின்னால் உட்கார்ந்துக்கொள்ள பஸ்நிறுத்தம் அருகே உள்ள டீக்கடையில் இருந்து ரோட்டை கடந்து பாலக்கோடு ரோட்டில் உள்ள தக்காளி மண்டிக்கு சென்றார்கள். ராயக்கோட்டை பக்கம் இருந்து வந்த இருச்சக்கர வாகனம் எனது மாமாவின் இருசக்கரவாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. அப்போது நான் விபத்து நடந்த பக்கம் 20 அடி தூரத்தில் இருந்தேன். இருவரையும் போக்குவண்டியில் பாலக்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவந்தோம். மலையன் இறந்துவிட்டதாக மருத்துவமனையில் சொன்னார்கள். மாட்டுக்காரன்(எ)முனியப்பன் ஒசூர் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும்போது தப்பை அருகே செல்லும்போது அவரும் இறந்துவிட்டதால் மீண்டும் பாலக்கோடு அரசு மருத்துவமனை வந்துவிட்டோம். மறுநாள் காலை போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.1 எனக்கு தெரிந்தவர். விபத்தின்போது அ.சா.1 எங்கிருந்தார் என நான் கவனிக்கவில்லை. சம்பவ இடம் சென்றபோது அ.சா.1–ம் உடன் இருந்தார் எப்போது சம்பவ இடம் வந்தார் என்று தெரியாது. சம்பவ இடத்திற்கு மேற்கு திசையில் சாலையில் நான் நின்றுக்கொண்டிருந்தேன். என்னுடன் யாரும் இல்லை தனியாக தான் இருந்தேன். நான் இருந்த இடத்தில் போண்டாகடை, செருப்பு கடை இருந்தது. சம்பவ இடம் பிரிவு ரோடு என்பதால் பொதுமக்கள் கூட்டமாக இருப்பார்கள் என்றால் பிரிவு

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.12 17:40:28 +0530

ரோடு தள்ளி சம்பவ இடம் இருந்ததால் சம்பவ இடத்தில் 20 நபர்கள் இருந்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் வந்தேன். இருசக்கர வாகனத்தில் கிழக்கு திசையில் இருந்து மேற்கு நோக்கி சென்றேன். நான் இருசக்கர வாகனம் இயக்கிகொண்டிருக்கும் போது விபத்தை கவனிக்க முடியாது என்றால் சரிதான். நான் விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு திரும்பி பார்ததபோது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. நான் வாகனத்தை நிறுத்திய பிறகு தான் விபத்து நடைபெற்றது. நான் வாகனத்தை நிறுத்த காரணம் என்ன என்றால் நான் வாகனத்தில் மெதுவாக இயக்கி கொண்டிருந்தபோது தான் விபத்து ஏற்பட்டது. இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் எங்கிருந்து வந்தார்கள் என்றால் டீக்கடையில் இருந்து வந்தார்கள். டீக்கடையில் இருந்து எனக்கு எதிர்திசையில் சாலையை கடந்து சென்றார்கள். சம்பவ சாலை தென்வடலாக செல்கிறது என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் பயணித்தவர்கள் சாலையை குறுக்காக கடந்தார்கள் என்றால் சரிதான். சாலையை கடக்கும்போது தான் விபத்து ஏற்பட்டது. பொதுவாகன இருசக்கர வாகனத்தில் சாலையை குறுக்காக கடக்கும்போது சாலையின் இருபுறங்களிலும் வாகன போக்குவரத்தை கவனித்து தான் கடக்கவேண்டும் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தில் திடீரென வாகனத்தை கவனிக்காமல் சாலையை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் இருசக்கர வாகனத்தில் பயணித்தவர்கள் சாலையை பாதியாக கடக்கும் போது விபத்து ஏற்பட்டது. விபத்திற்கு இறந்துபோனவரின் கவனக்குறைவு தான் காரணம் என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.06.12 17:40:34 +0530

Judicial Magistrate,
Palacode.